# 18

# ஊழிய வரங்கள்

> கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது... மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை *அப்போஸ்தலராகவும்*, சிலரைத் *தீர்க்கதரிசிகளாகவும்*, சிலரைச் *சுவிசேஷகராகவும்*, சிலரை *மேய்ப்பராகவும் போதகராகவும்* ஏற்படுத்தினார் (எபே. 4:7, 11—13 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).
>
> தேவனானவர் சபையிலே முதலாவது *அப்போஸ்தலரையும்*, இரண்டாவது *தீர்க்கதரிசிகளையும்*, மூன்றாவது *போதகர்களையும்*, பின்பு *அற்புதங்களையும்*, பின்பு *குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும்* ஏற்படுத்தினார் (1 கொரி. 12:28 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

இவை பொதுவாக ஊழிய வரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இது அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர், மேய்ப்பர் அல்லது போதகர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி விசுவாசிகள் அழைக்கப்பட்டு, அவர்களுக்கு வெவ்வேறான திறமைகள் கொடுக்கப்படுவதைக் குறிக்கிறது. எவரும் தன்னைத்தானே இந்தப் பொறுப்புக்களில்

நியமித்துக்கொள்ள முடியாது. மாறாக, ஒருவர் அழைக்கப்பட்டு, தேவனிடமிருந்து அவருக்கு வரம் கொடுக்கப்பட வேண்டும்.

இந்த ஐந்து பொறுப்புக்களில் ஒரு விசுவாசி ஒன்றுக்கு மேற்பட்ட பொறுப்புக்களை வகிக்கலாம் என்றாலும் சிலவிதச் சேர்க்கைகளே சாத்தியமாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு விசுவாசி மேய்ப்பர் மற்றும் போதகரின் பொறுப்பையோ அல்லது தீர்க்கதரிசி மற்றும் போதகரின் பொறுப்பையோ செய்யும்படி அழைக்கப்படலாம். என்றாலும், ஒருவர் மேய்ப்பர் மற்றும் சுவிசேஷகரின் பொறுப்புக்களைச் சேர்ந்து கவனிக்க முடியாது. ஏனென்றால் மேய்ப்பர் ஒரே இடத்தில் இருந்து உள்ளூர் சபையின் மந்தையைப் பராமரிக்க வேண்டும். சுவிசேஷகரோ பல இடங்களுக்கும் சென்று சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்.

இந்த ஐந்து பொறுப்புக்களில் இருப்பவர்களும் வெவ்வேறான நோக்கங்களுக்காக வரம்பெற்றிருந்தாலும், இவர்கள் எல்லோருமே ஒரே பொதுவான நோக்கத்துக்காகவே சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்: ‘‘ பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும்...’’ [எபே. 4:12]. [56] *பரிசுத்தமுள்ள மக்களை* [பரிசுத்தவான்கள் என்பதற்கு இதுவே அர்த்தமாகும்] *ஊழியத்தின் பணிகளுக்காக ஆயத்தப்படுத்துவதே ஒவ்வொரு ஊழியரின் இலக்காக இருக்க வேண்டும்.* என்றாலும் பெரும்பாலும் ஊழியத்தில் இருப்பவர்கள் தாங்கள் பரிசுத்தவான்களை ஆதாயப்படுத்துவதற்காக அழைக்கப்பட்டிருபபதுபோல நடந்துகொள்ளுவதில்லை, சபை ஆராதனைகளில் வந்திருக்கும் மாம்சீகமான மக்களைச் சந்தோஷப்படுத்தவே முயலுகிறார்கள். இந்தப் பொறுப்புக்களுக்காக அழைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும் தாங்கள் ‘‘சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகப் பரிசுத்தவான்களை’’ ஆதாயப்படுத்துவதில் தங்கள் பங்கைச் செய்கிறோமா என்பதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அப்படி ஒவ்வொரு ஊழியரும் செய்வார்களானால் ‘‘ஊழியம்’’ என்று அழைக்கப்படும் சில தவறான காரியங்களை அவர்கள் விட்டுவிடுவார்கள்.

### சில ஊழிய வரங்கள் துவக்ககாலச் சபைக்கு மட்டும்தானா?

எவ்வளவு காலம் சபைக்கு இந்த ஊழிய வரங்கள் கொடுக்கப்படும்? தமது பரிசுத்தவான்கள் ஊழியத்துக்காகப் பயன்படுத்தப்படும் வரையில், அதாவது குறைந்தபட்சமாக அவருடைய இரண்டாம் வருகை வரையில் இயேசுவானவர் இந்த வரங்களைக் கொடுப்பார். சபையானது எப்போதும் வளர்ச்சிதேவைப்படும் புதிதாகப் பிறந்த கிறிஸ்தவர்களை ஏற்றுக்கொள்ளுகிறது, நாமும்கூட இன்னும் முதிர்ச்சியடைய வாய்ப்பிருக்கிறது.

[56] ‘‘இயேசுகிறிஸ்துவுக்குச் சீஷர்களை உருவாக்குதல்’’ என்றும் இதைச் சொல்லலாம்.





துரதிருஷ்டவசமாக இன்று சிலர் தேவன் தமது திட்டத்தை மாற்றிக்கொண்டதுபோல, இரண்டு ஊழியங்களே – மேய்ப்பர் மற்றும் சுவிசேஷகர் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இல்லை, துவக்ககாலச் சபையில் தேவைப்பட்டதுபோல இப்போதும் நமக்கு அப்போஸ்தலரும், தீர்க்கதரிசிகளும், போதகர்களும் தேவைப்படுகிறார்கள். உலகெங்கிலுமுள்ல சபைகளில் பெரும்பாலும் இவர்களைக் குறித்த எடுத்துக்காட்டுகள் இல்லாமலிருப்பதற்குக் காரணம் இயேசுவானவர் *தமது* சபைகளுக்கு மட்டுமே இந்த வரங்களைக் கொடுக்கிறார் என்பதாகும். அவர் போலியான, பரிசுத்தமில்லா, பொய்யான சுவிசேஷத்தைப போதிக்கும் சபைகளுக்கு இவர்களைக் கொடுப்பதில்லை. போலிச் சபைகளில் ஊழிய வரங்களில் சிலவற்றை நிறைவேற்றப் பலவீனமான முயற்சியில் ஈடுபடும சிலரை மட்டுமே [பெரும்பாலும் மேய்ப்பர்களையும் ஒருசில சுவிசேஷகர்களையும் மட்டுமே] காண முடியும். ஆனால் அவர்கள் இயேசுவானவர் *தமது* சபைக்குக் கொடுத்த. தேவனால் அழைக்கப்பட்டு அபிஷேகிக்கப்பட்ட வரங்களுக்குக் கொஞ்சமும் ஒத்திருப்பதில்லை. அவர்கள் நிச்சயமாகப் பரிசுத்தமுள்ள மக்களை ஊழயத்துக்காக ஆயத்தப்படுத்தவில்லை. ஏனென்றால் அவர்கள் போதிக்கும் சுவிசேஷம் எவரையும் பரிசுத்தமுள்ளவர்களாக ஆக்குவதில்லை. அது மக்களைத் தாங்கள் மன்னிக்கப்பட்டவர்களாக நினைக்கும்படி செய்து அவர்களை ஏமாற்றுகிறது. இவர்கள் ஊழியத்துக்காக ஆயத்தப்படுத்தப்படுவதில் எந்த ஆர்வத்தையும் காட்டுவதில்லை. அவர்கள் தங்களைத் தாங்களே வெறுத்து, தங்கள் சிலுவையை எடுத்துக்கொள்ள விரும்புவதில்லை.

### நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை எப்படி அறிவீர்கள்?

தான் சபையின் ஒரு பொறுப்புக்காக அழைக்கப்பட்டிருப்பதை ஒருவர் எப்படி அறிந்துகொள்ள முடியும்? முதலாவதாக, அவர் தேவனிடமிருந்து ஒரு தெய்வீக அழைப்பை உணருவார். ஒரு குறிப்பிட்ட மணியை முடிக்கும்படியான பாரத்தை அவர் பெறுவார். இது நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு தேவையைக் கண்டறிவதைவிட அதிகமானதாகும். இது தேவனால் கொடுக்கப்பட்ட பசிதாகமாகும்; இது ஒருவரை ஒரு குறிப்பிட்ட ஊழியத்தைச் செய்யும்படி *பலவந்தம்பண்ணுகிறது*. அவர் மெய்யாகவே தேவனால் அழைக்கப்பட்டிருப்பாரானால், தனது அழைப்பை நிறைவேற்றத் துவங்கும் வரையில் அவர் திருப்தியடைய மாட்டார். இது ஒருவர் ஒரு மனிதராலோ அல்லது ஒரு மக்கள் குழுவாலோ நியமிக்கப்படுவது போன்றதல்ல. தேவனே ஒருவரை அழைக்கிறார்.

இரண்டாவதாக, மெய்யாகவே அழைக்கப்பட்ட நபர் தான் அழைக்கப்பட்டிருக்கும் பணிக்காகத் தேவனால் பலப்படுத்தப்படுவதைக் காண்பார். இந்த ஐந்து பொறுப்புக்களில் ஒவ்வொன்றும் இயல்புக்கு

அப்பாற்பட்ட அபிஷேகத்தைக் கொண்டிருக்கிறது. இது தேவன் ஒருவர் என்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறாரோ அதை அவர் செய்யும்படி அவரைப் பலப்படுத்துகிறது. அழைப்போடுகூட அபிஷேகமும் வருகிறது. *அபிஷேகம் இல்லாவிட்டால் அழைப்பு இல்லையென்றே அர்த்தமாகும்.* ஒருவர் ஒரு குறிப்பிட்ட ஊழியத்தைச் செய்ய விரும்பலாம், ஒரு வேதாகமப் பள்ளியில் சேர்ந்து நான்காண்டுகள் படித்து தன்னைத்தானே ஆயத்தப்படுத்திக்கொள்ளலாம். ஆனால் தேவனிடமிருந்து அபிஷேகத்தைப் பெறாவிட்டால் அவரால் மெய்யான வெற்றியைப் பெற முடியாது.

மூன்றாவதாக, அவர் குறிப்பிட்ட வரங்களைச் செயல்படுத்தும்படியாக, தேவன் வாய்ப்பின் கதவுகளைத் திறந்துகொடுப்பதை அவர் காண்பார். இந்த வகையில் தான் உண்மையுள்ளவனாக இருப்பதை அவர் நிரூபிக்க முடியும். இறுதியில் அவருக்குப் பெரிய வாய்ப்புகளும், பொறுப்புக்களும், வரங்களும் கொடுக்கப்படும்.

ஒருவர் இந்த ஐந்து ஊழிய வரங்களில் ஏதேனும் ஒன்றுக்காகத் தேவனால் கொடுக்கப்பட்ட உள்ளான உந்துதலையும், அழைப்பையும் பெறாவிட்டால், அல்லது தேவனால் கொடுக்கப்பட்ட பணியைச் செய்து முடிக்கும்படி சிறப்பான அபிஷேகம் கொடுக்கப்பட்டிருப்பதை உணராவிட்டால், தேவன் தன்னை அழைக்காத ஒன்றைச் செய்யும்படி அந்த நபர் முயலக் கூடாது. மாறாக, அவர் தனது உள்ளூர் சபையிலும், தனது அண்டைப் பகுதியிலும், தான் வேலைசெய்யும் இடத்திலும் மற்றவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாக நடந்துகொள்ள வேண்டும். அவர் ஐந்தம்ச ஊழியத்துக்கு அழைக்கப்பட்டிராவிட்டாலும், தேவனால் கொடுக்கப்பட்டுள்ள வரங்களைச் செயல்படுத்தும்படி அவர் அழைக்கப்பட்டிருக்கிறார். அதில் தான் உண்மையுள்ளவராக இருப்பதை நிரூபிக்க அவர் முயல வேண்டும்.

வேதாகமம் ஐந்து ஊழிய வரங்களைக் குறிப்பிட்டாலும், ஒரு குறிப்பிட்ட பொறுப்பில் இருப்பவர்கள் ஒரே ஊழியத்தைப் பெற்றிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ‘‘ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு’’ என்று பவுல் சொல்லியிருக்கிறார் [1 கொரி. 12:5]. இதனால் ஒரே பொறுப்பில் இருப்பவர்களிடையே ஊழியங்களில் வேறுபாடுகள் காணப்படலாம். மேலும் இந்தப் பொறுப்புக்களில் இருப்பவர்களுக்கு வெவ்வேறான அளவிலான அபிஷேகம் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எனவே அபிஷேகத்தின் அளவைக் கொண்டு நாம் பொறுப்புக்களை வகைப்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, சில போகதர்கள் மற்றப் போதகர்களைவிட அதிகமாக அபிஷேகம் பெற்றிருப்பதுபோலத் தோன்றுகிறது. மற்ற ஊழிய வரங்களிலும் இதுவே உண்மையாக இருக்கிறது. எந்தவொரு ஊழியரும் தான் காரியங்களைச் செய்வதின் மூலமாகத் தனது ஊழியத்தில் அதிகப்படியான அபிஷேகத்தைப் பெறலாம் என்று நான் தனிப்பட்ட முறையில் விசுவாசிக்கிறேன்.





அதாவது அவர் நீண்டகாலமாகத் தன்னை உண்மையுள்ளவராக நிரூபித்து வரலாம் அல்லது தன்னை இன்னும் ஆழமாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கலாம்.

## அப்போஸ்தல பொறுப்பைக் குறித்த நெருக்கமான பார்வை

அப்போஸ்தலர் என்று மொழிபெயர்க்கப்பட்டுகள்ள கிரேக்கச் சொல் *அப்போஸ்தொலோஸ்* என்பதாகும். இதற்கு ‘‘அனுப்பப்படும் ஒருவர்’’ என்பது அர்த்தமாகும். மெய்யான புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர் தேவனால் சபைகளை உருவாக்கும்படி ஒரு குறிப்பிட்ட இடத்துக்கோ அல்லது இடங்களுக்கோ அனுப்பப்படும் ஒரு விசுவாசியாவர். தேவனுடைய ‘‘மாளிகைக்கு’’ அவர் ஆவிக்குரிய அஸ்திபாரத்தை இடுகிறார். இவர் ஒருவகையில் ‘‘பொதுவான ஒப்பந்தகாரராக’’ இருக்கிறார். தானும் ஒரு அப்போஸ்தலனாக இருக்கும் பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள். எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே *புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல* அஸ்திபாரம் போட்டேன் [1 கொரி. 3:9–10 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

ஒரு ‘‘புத்தியுள்ள சிற்பாசாரி’’ அல்லது பொதுவான ஒப்பந்தகாரர் ஒரு கட்டிடத்தின் மொத்தக் கட்டுமானத்தையும் கண்காணிக்கும் ஒருவராக இருக்கிறார். முடிவான கட்டிடத்தை அவர் தரிசனமாகக் காண்கிறார். அவர் தச்சுக்காரரைப்போலவோ அல்லது கட்டிடம் கட்டுகிறவரைப்போலவோ இத்தகைய தொழிலில் தேர்ச்சிபெற்றிருப்பதில்லை. அவரால் ஒருவேளை இவர்களின் வேலையைச் செய்ய *முடிந்திருந்தாலும்*, அவர்களைப்போல அவ்வளவு நேர்த்தியாகச் செய்ய முடியாதிருக்கலாம். இதைப்போலவே ஒரு அப்போஸ்தலர் ஒரு சுவிசேஷகர் அல்லது மேய்ப்பரின் வேலையைச் செய்யக் கூடியவராக இருக்கிறார். ஆனால் அவர் சபைகளை ஸ்தாபிக்கும்போது ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு இதைச் செய்கிறார். [பவுல் அப்போஸ்தலன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஆறு மாதம முதல் மூன்று ஆண்டுகள் வரையில் தங்கியிருந்தார்.]

அப்போஸ்தலர்கள் சபைகளை ஸ்தாபிப்பதிலும், பிறகு அவை தேவன் விரும்பிய பாதையில் செல்லுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதிலும் சிறப்பான ஊழியம் செய்கிறார். தான் ஸ்தாபிக்கும் ஒவ்வொரு சபைக்கும் மூப்பர்கள்/போதகர்கள்/கண்காணிகளை நியமிக்கும் பொறுப்பு அவருக்கு இருக்கிறது [பார்க்க, அப். 14:21–23; தீத்து 1:5].

## மெய்யான மற்றும் பொய்யான அப்போஸ்தலர்கள்

இன்று சில ஊழியர்கள் சபைகளுக்கு மேலான அதிகாரத்தைப் பெறும்படி ஆசைப்பட்டு, தாங்கள் அப்போஸ்தலர்களாக அழைக்கப் பட்டிருப்பதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் பெரும்பாலான வர்களுக்குப் பெரிய பிரச்சினை இருக்கிறது. அவர்கள் சபைகளை ஸ்தாபிக்காதபடியானாலும் [அல்லது ஒன்றிரண்டு சபைகலை மட்டுமே ஸ்தாபித்திருக்கிறபடியாலும்] வேதாகமரீதியான அப்போஸ்தலருக்குரிய வரங்களையும் அபிஷேகத்தையும் பெற்றிராதபடியாலும், தாங்கள் சபைகளுக்கு மேலாகக்கொண்டிருக்கும் அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளும், ஏமாற்றப்படக் கூடிய போதகர்களையே நியமிக்க வேண்டி யிருக்கிறது. நீங்கள் ஒரு போதகராக இருப்பீர்களானால், இப்படித் தங்களையே உயர்த்திக்கொள்ளும், அதிகார வெறிகொண்ட பொய்யான அப்போஸ்தலர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். அவர்கள் பெரும்பாலும் ஆட்டுத்தோலை மூடியிருக்கும் ஓநாய்களாகவே இருக்கிறார்கள். பெரும்பாலும் அவர்கள் பணத்துக்காகவே இப்படிச் செய்கிறார்கள். வேதாகமம் பொய்யான அப்போஸ்தலர்களுக்கு எதிராக எச்சரிக்கிறது [பார்க்க, 2 கொரி. 11:13; வெளி. 2:2]. தாங்கள் அப்போஸ்தலர்கள் என்று அவர்களே உங்களிடம் சொல்ல வேண்டி யிருக்குமானால், அதுவே அவர்கள் அப்போஸ்தலர்கள் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. அவர்களுடைய கனி அவர்களுக்காகப் பேச வேண்டும்.

தன்னுடைய சொந்தச் சபையை ஸ்தாபித்து, பல ஆண்டுகளாக அதைப் பராமரிக்கும்படி தங்கியிருக்கும் போதகர் ஒரு அப்போஸ்தலர் அல்ல. அவர்கள் தங்கள் சொந்த சபையை ஸ்தாபித்திருக்கிறபடியால் அவர்களை *அப்போஸ்தல போதகர்கள்* என்று ஒருவேளை அழைக்கலாம். என்றாலும் அவர்கள் ஒரு அப்போஸ்தலரின் பொறுப்பில் இருக்கவில்லை. ஏனென்றால் அப்போஸ்தலர்கள் தொடர்ந்து சபைகளை ஸ்தாபிக்கிறார்கள்.

மெய்யாகவே தேவனால் அனுப்பப்பட்டு அபிஷேகம் பெற்றிருக்கும் ''அருட்பணியாளர்'' சபைகளை ஸ்தாபிப்பதற்கே முக்கியமாக அழைக்கப்பட்டிருக்கிறபடியால், அவர் அப்போஸ்தலப் பொறுப்பில் செயல்படலாம். ஆனால் வேதாகமப் பள்ளிகளை நிறுவுவதிலும், மேய்ப்பர்களுக்குப் பயிற்சியளிப்பதிலும் ஈடுபடுபவர்கள் அபபோஸ்தலர்கள் அல்ல, அவர்கள் போதகர்கள் என்றே அழைக்கப்பட வேண்டும்.

ஒரு மெய்யான அப்போஸ்தலரின் ஊழியத்தில் அற்புத அடை யாளங்கள் காணப்படும். இது அவர் சபைகளை ஸ்தாபிப்பதில் அவருக்கு உதவியாக இருக்கிறது. பவுல் இப்படி எழுதியிருக்கிறார்:





> நான் ஒன்றுமில்லையென்றாலும், மகா பிரதான அப்போஸ்தலருக்கும் நான் எவ்வளவும் குறைந்த வனாயிராதபடியால், உங்களாலே மெச்சிக்கொள்ளப்பட வேண்டியதாயிருந்ததே. அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமை களோடும் உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே [2 கொரி. 12:11ஆ—12].

ஒருவருடைய ஊழியத்தில் அற்புத அடையாளங்கள் காணப்படாவிட்டால் அவர் ஒரு அப்போஸ்தலர் அல்ல. மெய்யான அப்போஸ்தலர்கள் அபூர்வமாகவே காணப்படுகிறார்கள். அவர்கள் போலியான, பரிசுத்தமில்லாத, பொய்யான சுவிசேஷத்தைப் போதிக்கும் சபைகளில் இருப்பதில்லை. பொதுவாக சுவிசேஷத்துக்காக இப்போதுதான் ஆயத்தப்படுத்தப்பட்டு வரும் பகுதிகளில் அவர்களை நான் அதிகமாகக் காண்கிறேன்.

## அப்போஸ்தலரின் மேலான இடம்

புதிய ஏற்பாட்டில் ஊழிய வரங்களைக்குறித்துப் பட்டியலிடப் பட்டுள்ள இரண்டு இடங்களிலும் அப்போஸ்தலர்களின் பொறுப்புக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவே மிக மேன்மையான அழைப்பு என்பது சுட்டிக்காட்டப்படுகிறது [பார்க்க, எபே. 4:11; 1 கொரி. 12:28].

எவரும் தனது ஊழியத்தை ஒரு அப்போஸ்தலராகத் தொடங்குவது கிடையாது. *இறுதியில்* ஒரு நபர் அப்போஸ்தலராக அழைக்கப்பட்டாலும் அவர் அந்தப் பொறுப்பில் தனது ஊழியத்தைத் துவங்குவதில்லை. அவர் பிரசங்கிப்பதிலும் போதிப்பதிலும் உண்மையுள்ளவராக இருப்பதை ஒரு காலகட்டத்துக்கு நிரூபிக்க வேண்டும். இறுதியில் அவர் தேவன் தன்னை ஆயத்தப்படுத்திய பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவார். பவுல் தனது தாயின கர்ப்பத்தில் இருக்கும்போதே அப்போஸ்தலராக இருக்கும் படி அழைக்கப்பட்டிருந்தாலும், அவர் இறுதியில் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவதற்கு முன்பாகப் பல ஆண்டுகள் முழுநேர ஊழியத்தைச் செய்ய வேண்டியிருந்தது [பார்க்க, கலா. 1:15—2:1]. அவர் முதலில் ஒரு போதகராகவும், தீர்க்கதரிசியாகவுமோ தனது ஊழியத்தைத் துவங்கினார் [பார்க்க, அப். 13:1—2]. பிறகு அவர் பரிசுத்த ஆவியானவரால் அனுப்பப்பட்டபோது அப்போஸ்தலராக உயர்த்தப் பட்டார் [பார்க்க, அப். 14:14].

பவுலையும் பன்னிருவரையும் தவிர வேறு அப்போஸ்தலர்கள் இந்த வசனங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம்: அப். 1:15—26; 14:14; ரோமர் 16:7; 2 கொரி. 8:23; கலா. 1:17—19; பிலி. 2:25; 1 தெச. 1:1; 2:6. [2 கொரி.8:23 வசனத்திலும் பிலி. 2:25 வசனத்திலும்

*ஸ்தானாபதி* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொல் *அப்போஸ்தொலோஸ்* என்பதாகும்]. இதனால் பன்னிருவர் மட்டுமே அப்போஸ்தலர் என்ற கொள்கை தவறானது என்பது தெரிகிறது.

என்றாலும், பன்னிரு அப்போஸ்தலர்கள் மட்டுமே ''ஆட்டுக் குட்டியானவருடைய அப்போஸ்தலர்கள்'' என்று அழைக்கப்பட முடியும். இந்தப் பன்னிருவர் மட்டுமே இயேசுவின் ஆயிரமாண்டு ஆளுகையில் முக்கியமான இடத்தைப் பெறுவார்கள் [பார்க்க, மத். 19:28; வெளி. 21:14]. வேதவசனங்களை எழுதும்படி தனிச்சிறப்பான வகையில் ஏவுதல் பெற்ற பேதுரு, யாக்கோபு, யோவான் போன்ற அப்போஸ்தலர்கள் இனிமேலும் நமக்குத் தேவையில்லை; ஏனென்றால் வேதாகம வெளிப்பாடு முற்றுப்பெற்றிருக்கிறது. என்றாலும், நடபடி களின் புத்தகத்தில் பவுலும் மற்ற அப்போஸ்தலர்களும் செய்ததுபோல, இன்றும் நமக்குப் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் சபைகளை ஸ்தாபிக்கும் அப்போஸ்தலர்கள் தேவைப்படுகிறார்கள்.

### தீர்க்கதரிசியின் பொறுப்பு

தீர்க்கதரிசி என்பவர் இயல்புக்கு அப்பாற்பட்ட வெளிப்பாட்டைப் பெற்று, தேவ ஏவுதலின்பேரில் பேசும் ஒருவராவார். இயல்பாக, அவர் அடிக்கடி ஆவிக்குரிய வரமாகிய தீர்க்கதரிசனத்திலும், வெளிப்படுத்தல் வரங்களிலும் பயன்படுத்தப்படுவார்: ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், ஆவிகளைப் பகுத்தறிதல்.

எந்தவொரு விசுவாசியும் ஆவியானவரின் சித்தப்படி தீர்க்கதரிசன வரத்தில் பயன்படுத்தப்பட முடியும். ஆனால் அது அவரை ஒரு தீர்க்கதரிசியாக ஆக்கிவிடுவதில்லை. தீர்க்கதரிசி என்பவர் முதலில் அபிஷேகத்தோடு பிரசங்கிக்கும், போதிக்கும் ஒருவராக இருக்கிறார். தீர்க்கதரிசி என்பவர் இரண்டாவது மேலான அழைப்பைப் பெற்றிருக்கிற படியால் [1 கொரிந்தியர் 12:28 வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள வரிசையைப் பாருங்கள்] ஒரு முழு நேர ஊழியரும்கூடப் பல ஆண்டுகள் ஊழியத்தில் ஈடுபட்ட பிறகுதான் அவருக்குத் தீர்க்கதரிசியின் பொறுப்பு கொடுக்கப்பட வேண்டும். அவர் இந்தப் பொறுப்பில் இருப்பாரானால், அதற்கேற்றபடி இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் ஆயத்தப்படுத்தப்படுவார்.

புதிய ஏற்பாட்டில் யூதா, சீலா இருவரும் தீர்க்கதரிசிகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தியோகியா சபையினருக்கு ஒரு நீளமான தீர்க்கதரிசனத்தைக் கொடுத்தார்கள் என்று நாம் அப்போஸ்தலர் 15:32 வசனத்தில் வாசிக்கிறோம்:

> யூதா சீலா என்பவர்களும் தீர்க்கதரிசிகளாயிருந்த படியினாலே, அநேக வார்த்தைகளினால் சகோதரருக் குப் புத்திசொல்லி, அவர்களைத் திடப்படுத்தி...





தீர்க்கதரிசிக்கான மற்றொரு புதிய ஏற்பாட்டு எடுத்துக்காட்டாக நாம் அகபுவைக் குறிப்பிடலாம். அப்போஸ்தலர் 11:27—28 வசனங்களில் நாம் இப்படி வாசிக்கிறோம்:

> அந்நாட்களிலே எருசலேமிலிருந்து சில தீர்க்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவனாகிய அகபு என்பவன் எழுந்து, உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான்; அது அப்படியே கிலவுதிராயனுடைய நாட்களிலே உண்டாயிற்று.

அகபுவுக்கு ஞானத்தைப் போதிக்கும் வசனம் கொடுக்கப் பட்டிருப்பதைக் கவனியுங்கள். எதிர்காலத்தைக் குறித்த ஒரு காரியம் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டது. என்றாலும், அகபு வருங்காலத்தில் நடக்கும் எல்லாக் காரியங்களையும் அறிந்திருக்கவில்லை. பரிசுத்த ஆவியானவர் தமது சித்தப்படி அவனுக்கு வெளிப்படுத்தியவைகளை மட்டுமே அவன் அறிந்திருந்தான்.

அப்போஸ்தலர் 21:10—11 வசனங்களில் அகபுவின் ஊழியத்தின் மூலமாக ஞானத்தைப் போதிக்கும் வசனம் மறுபடியுமாகச் செயல்படுவதை நாம் காண்கிறோம். இந்தமுறை அவன் பவுலுக்காக இப்படிச் சொன்னான்:

> நாங்கள் அநேக நாள் அங்கே தங்கியிருக்கையில், அகபு என்னும் பேர்கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான். அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான்.

புதிய உடன்படிக்கையின் கீழாகத் தீர்க்கதரிசிகளின் மூலம் தனிப்பட்ட வழிநடத்துதலைத் தேடுவது வேதாகமரீதியானதா? இல்லை. எல்லா விசுவாசிகளும் தங்களை வழிநடத்தும்படி உள்ளுக்குள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருப்பதே இதற்குக் காரணமாகும். தனது சொந்த ஆவியில் ஏற்கெனவே ஒருவர் தேவனுடைய வழிநடத்துதல் என்று அறிந்திருப்பதை ஒரு தீர்க்கதரிசி *உறுதிப்படுத்த* மட்டுமே செய்கிறார். எடுத்துக்காட்டாக, அகபு பவுலைக்குறித்துத் தீர்க்கதரிசனம் சொல்லிய போது, பவுல் என்ன செய்ய வேண்டும் என்ற வழிநடத்துதல் எதையும் கொடுக்கவில்லை. ஏற்கெனவே சிறிது காலமாகப் பவுல் அறிந்திருந் ததை அகபு உறுதிப்படுத்துவதை மட்டுமே நாம் காண்கிறோம்.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி, பவுல் அப்போஸ்தல ஊழியத்துக்காக அழைக்கப்படுவதற்கு முன்பாக அவர் ஒரு தீர்க்கதரிசி [மற்றும் போதகரின்] பொறுப்பில் ஊழியம் செய்தார் [பார்க்க, அப். 13:1]. கலாத்தியர் 1:11–12 வசனங்களின்படி பவுல் ஆண்டவரிடமிருந்து வெளிப்பாடுகளைப் பெற்றார் என்பதை நாம் அறிகிறோம். அவர் பல தரிசனங்களையும் பெற்றிருக்கிறார் [பார்க்க, அப். 9:1–9; 18:9–10; 22:17–21; 23:11; 2 கொரி. 12:1–4].

பொய்யான சபையில் மெய்யான அப்போஸ்தலரைப் பார்க்க முடியாது என்பதுபோல மெய்யான தீர்க்கதரிசிகளையும் பார்க்க முடியாது. பொய்யான சபை சீலா, யூதா, அகபு போன்ற தீர்க்கதரிசிகளை ஏற்றுக் கொள்ளுவது கிடையாது. மெய்யான தீர்க்கதரிசிகள் அவர்களுடைய கீழ்ப்படியாமை குறித்த தேவனுடைய வெறுப்பை வெளிப்படுத்தி விடுவார்கள் [வெளிப்படுத்தல் நூலில் சின்ன ஆசியாவிலுள்ள சில சபைகளைக்குறித்து யோவான் வெளிப்படுத்தியதுபோல] என்பதே இதற்குக் காரணமாகும். பெய்யான சபை இதை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

### போதகர் என்னும் பொறுப்பு

1 கொரிந்தியர் 12:28 வசனத்தின்படி, போதகர் பொறுப்பு மூன்றாவதாகக் குறிப்பிப்படப்படும் மேலான அழைப்பாகும். இவர் தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும்படியாக இயல்புக்கு அப்பாற்பட்ட அபிஷேகத்தைப் பெற்றவராவார். ஒருவர் வேதாகமத்தைப் போதிக்கிறார் என்கிறபடியால் அவர் புதிய ஏற்பாட்டு ரீதியிலான போதகராக ஆகிவிட முடியாது. பலர் தாங்கள் விரும்புவதி னாலேயோ அல்லது கடமைப்பட்டிருப்பதினாலேயோ போதிக்கிறார்கள். ஆனால் போதகர் என்ற பொறுப்பிலிருப்பவர் போதிக்கும்படி இயல்புக்கு அப்பாற்பட்ட வரத்தைப் பெற்றிருக்கிறார். அவருக்கு அடிக்கடி தேவனுடைய வார்த்தையைக் குறித்த இயல்புக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடு கொடுக்கப்படுகிறது. அவர் வேதாகமத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய வகையிலும், செயல்படுத்தக்கூடிய வகையிலும் போதிக்கிறார்.

புதிய ஏற்பாட்டில் அப்பொல்லோ இந்தப் பொறுப்பைக் கொண்ட ஒருவராவார். 1 கொரிந்தியர் நிருபத்தில் பவுல் தனது அப்போஸ்தல ஊழியத்தையும், அப்பொல்லோவின் போதக ஊழியத்தையும் இப்படி ஒப்பிடுகிறார்:

> நான் நட்டேன், *அப்பொல்லோ நீர்ப் பாய்ச்சினான்*, தேவனே விளையச் செய்தார்...எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரி யைப்போல அஸ்திபாரம் போட்டேன். *வேறொருவன்*





> *அதின்மேல் கட்டுகிறான்* [1 கொரி. 3:6, 10 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

போதகராகிய அப்பொல்லோ ஆதியில் நடவுமில்லை, அஸ்திபாரம் இடவுமில்லை. மாறாக, அவர் முளைத்து எழும்பியவைகளுக்குத் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு நீர்ப்பாய்ச்சினார், ஏற்கெனவே இடப்பட்டிருந்த அஸ்திபாரத்தின்மேல் மாளிகையைக் கட்டினார்.

அப்பொல்லோவைக் குறித்து அப்போஸ்தலர் 18:27 வசனத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது:

> பின்பு அவன் [அப்பொல்லோ] அகாயா நாட்டிற்குப் போகவேண்டுமென்றிருக்கையில், சீஷர்கள் அவனை ஏற்றுக்கொள்ளும்படி சகோதரர் அவர்களுக்கு எழுதினார்கள். அவன் அங்கே வந்த பின்பு வெளியரங்க மாக யூதர்களுடனே பலமாய்த் தர்க்கம்பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களைக் கொண்டு திருஷ்டாந்தப்படுத்தினபடியால், கிருபை யினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான்.

ஏற்கெனவே கிறிஸ்தவர்களாக இருந்தவர்களுக்கு அப்பொல்லோ அதிக உதவியாக இருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். அவர் வல்லமையோடு [''பலமாக''] பேசினார் என்று நாம் வாசிக்கிறோம். அபிஷேகம்பெற்ற போதனை எப்போதுமே பலமுள்ளதாக இருக்கிறது.

சபைக்கு, அற்புதங்களையும் குணமாக்கும் வரங்களையும்விடப் போதிக்கும் ஊழியம் அதிக முக்கியமானதாக இருக்கிறது. எனவேதான் 1 கொரிந்தியர் 12:28 வசனத்தில் இந்த வரங்களுக்கு முன்பாக அது பட்டியலிடப்பட்டுள்ளது:

> தேவனானவர் சபையிலே *முதலாவது* அப்போஸ்தல ரையும், *இரண்டாவது* தீர்க்கதரிசிகளையும், *மூன்றாவது* போதகர்களையும், *பின்பு* அற்புதங்களையும், *பின்பு* குணமாக்கும் வரங்களையும்... ஏற்படுத்தினார் [அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

துரதிருஷ்டவசமாக, விசுவாசிகள் பெரும்பாலும் ஆவிக்குரிய வளர்ச்சியையும், தங்கள் வாழ்க்கையில் பரிசுத்தத்தையும் உருவாக்கும் தெளிவான திருவசனப் போதனைக்குச் செவிகொடுப்பதைவிட, குணமாக்குதலைக் காணும்படியாகவே அதிகமாக இழுக்கப்படு கிறார்கள்.

வேதாகமம் பிரசங்கிப்பது, போதிப்பது இரண்டையும் குறிப்பிடு கிறது. போதிப்பது தர்க்கரீதியானதாகவும், அறிவுறுத்துவதாகவும்

இருக்கிறது. பிரசங்கிப்பது தூண்டுதலளிப்பதாக இருக்கிறது. சுவிசேஷகர்கள் பொதுவாகப் பிரசங்கிக்கிறார்கள். போதகர்களும் மேய்ப்பர்களும் போதிக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்கவும் போதிக்கவும் செய்கிறார்கள். சில விசுவாசிகள் போதனையின் மதிப்பை அங்கிகரிக்காமலிருப்பது சோகமான காரியமாகும். பேசுபவர்கள் வேகமாகவும், உரத்த குரலிலும் பேசும்போது மட்டுமே அவர்கள் அபிஷேகம்பெற்றிருக்கிறார்கள் என்று சிலர் நினைக்கிறார்கள். அது தவறாகும்.

இயேசுவானவர் அபிஷேகம்பெற்ற போதகருக்குச் சிறந்த எடுத்துக் காட்டானவராக இருக்கிறார். போதிப்பது அவருடைய ஊழியத்தில் மிக முக்கியமான பங்கு வகித்தபடியால் சிலர் அவரைப் ''போதகர்'' என்று அழைத்தார்கள் [மத். 8:19; மாற்கு 5:35; யோவான் 11:28].

போதகர்களைக் குறித்தும் போதிப்பதைக் குறித்தும் மேலும் ஆய்வு செய்ய இந்த வசனங்களைப் பாருங்கள்: அப். 2:42; 5:21, 25, 28, 42; 11:22–26; 13:1; 15:35; 18:11; 20:18–20; 28:30–31; ரோமர். 12:6–7; 1 கொரி. 4:17; கலா. 6:6; கொலோ. 1:28; 1 தீமோ. 4:11–16; 5:17; 6:2; 2 தீமோ. 1:11; 2:2; யாக். 3:1. கடைசியாகக் கொடுக்கப்பட்டுள்ள வசனம் போதகர்கள் கண்டிப்பான வகையில் நியாயந்தீர்க்கப்படு கிறபடியால், தாங்கள் எதைப்போதிக்கிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கிறது. அவர்கள் திருவசனத்தை மட்டுமே போதிக்க வேண்டும்.

### சுவிசேஷகரின் பொறுப்பு

சுவிசேஷகர் என்பவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அபிஷேகம் பெற்றவராவார். அவருடைய செய்திகள் மக்களை மனந்திரும்பும்படி செய்து, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவில் விசுவாசத்துக்குள்ளாக வழிநடத்துகின்றன. அவிசுவாசிகளின் கவனத்தை ஈர்த்து, செய்தியின் உண்மையைக் குறித்து உணர்த்தும் படியாக இவை அற்புத அடையாளங்களோடு கொடுக்கப்படுகின்றன.

துவக்ககாலச் சபையில் பல சுவிசேஷகர்கள் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் நடபடிகளின் புத்தகத்தில் ஒருவர் மட்டுமே சுவிசேஷகராகப் பட்டியலிடப்பட்டுள்ளார். அவருடைய பெயர் பிலிப்பு: ''ஏழு பேரில் ஒருவனாகிய *பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய* வீட்டிலே பிரவேசித்து, அவனிடத்தில் தங்கினோம்'' [அப். 21:8 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

பிலிப்பு தனது ஊழியத்தை முதலில் பந்திவிசாரணை செய்யும் உதவிக்காரராகத் துவங்கினார் [பார்க்க, அப். 6:1–6]. ஸ்தேவானின் மரணத்தின்போது சபைக்கு அதிகமான துன்புறுத்தல் ஏற்பட்ட வேளையில்





இவர் சுவிசேஷகரராக உயர்த்தப்பட்டார். அவர் முதலில் சமாரியாவில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்:

> அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான். பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப் பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு, அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகத் திமிர்வாதக்காரர்களும், சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அந்தப் பட்டணத் திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று [அப். 8:5–8].

பிலிப்பு கிறிஸ்துவை மட்டுமே போதித்தார் என்பதைக் கவனியுங்கள். சீஷர்களை, அதாவது கிறிஸ்துவைக் கீழ்ப்படிதலுடன் பின்பற்றுகிறவர்களை உருவாக்குவதே அவருடைய இலக்காக இருந்தது. எனவே அவர் கிறிஸ்துவை அற்புதங்களைச் செய்கிறவரா கவும், தேவனுடைய குமாரனாகவும், ஆண்டவராகவும், இரட்சக ராகவும், விரைவில் வரப்போகிற நியாயாதிபதியாகவும் அறிவித்தார். மனந்திரும்பி, ஆண்டவரைப் பின்பற்றும்படி அவர் மக்களை வலியுறுத்தினார்.

பிலிப்புவின் செய்தியை உறுதிப்படுத்தும்படியாக அற்புத அடையாளங்கள் கொடுக்கப்பட்டன என்பதையும் கவனியுங்கள். சுவிசேஷகர் பொறுப்பில் இருக்கும் ஒருவருக்குக் குணமாக்குதலின் வரத்திலும் மற்ற ஆவிக்குரிய வரங்களிலும் அபிஷேகம் கொடுக்கப் படும். பொய்யான சபையில் பொய்யான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் பொய்யான சுவிசேஷகர்கள் மட்டுமே இருக்கிறார்கள். இன்று உலகம் இப்படிப்பட்ட சுவிசேஷகர்களால் நிறைந்திருக்கிறது. தேவன் அவர்களுடைய ஊழியத்தை அற்புதங்களினாலும், குணமாக்கு தலினாலும் உறுதிப்படுத்துவதில்லை. ஏனென்றால் அவர்கள் அவருடைய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவில்லை. அவர்கள் மெய்யாகவே கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதில்லை. அவர்கள் பெரும்பாலும் மக்களின் தேவைகளைக் குறித்தும், கிறிஸ்து எப்படி அவர்களுக்கு அபரிமிதமான வாழ்வைக் கொடுப்பார் என்பதைக் குறித்தும், மனந்திரும்புதல் இல்லாத இரட்சிப்பின் சூத்திரத்தைக் குறித்தும் போதிக்கிறார்கள். அவர்கள் மக்களைப் பொய்யான மனமாற்றத்துக்குள் வழிநடத்துகிறார்கள். அது அவர்களுடைய குற்ற உணர்வை மாற்றினாலும், அது அவர்களை இரட்சிப்பதில்லை. அவர் களுடைய பிரசங்கத்தின் விளைவாக மக்கள் மறுபடியும் பிறப்பதின் வாய்ப்பு இன்னும் குறைகிறது. ஏனென்றால் தாங்கள் ஏற்கெனவே

பெற்றிருப்பதாக அவர்கள் நினைப்பதை மறுபடியும் பெற்றுக்கொள்ள அவசியம் இருப்பதாக அவர்கள் காண்பதில்லை. இப்படிப்பட்ட சுவிசேஷகர்கள் சாத்தானின் ராஜ்யத்தையே கட்டுகிறார்கள்.

எபேசியர் 4:11 வசனத்தில் பட்டியலிடப்பட்டுள்ளதுபோல 1 கொரிந்தியர் 12:28 வசனத்தில் மற்ற ஊழிய வரங்களோடு சுவிசேஷகரின் பொறுப்பு பட்டியலிடப்பட்டவில்லை. அதில் ''அற்புதங்கள் மற்றும் குணமாக்கும் வரங்கள்'' என்று குறிப்பிடப்பட்டிருப்பவை சுவிசேஷ கரின் பொறுப்பையே குறிப்பிடுகின்றன என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் சுவிசேஷகனாகிய பிலிப்புவின் ஊழியத்தில் இவை காணப்பட்டன. இவை எந்தவொரு சுவிசேஷகரின் ஊழியத்தையும் இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் உறுதிப்படுத்தும்.

ஒவ்வொரு சபையாகச் சென்று தங்களைச் சுவிசேஷகர் என்று அழைத்துக்கொள்ளும் பலர் உண்மையில் சுவிசேஷகர்கள் இல்லை. ஏனென்றால் அவர்கள் சபைக் கட்டிடத்துக்குள்ளாகக் கிறிஸ்தவர் களுக்கு மட்டுமே பிரசங்கிக்கிறார்கள். அவர்களுடைய ஊழியத்தில் குணமாக்குதலோ அல்லது அற்புதங்களோ காணப்படுவதில்லை. [சிலர் இந்த வரங்களைப் பெற்றிருப்பதாகப் பாவனை செய்கிறார்கள், அவர்களால் எல்லோரையும் ஏமாற்ற முடியாது. அவர்கள் செய்யும் மிகப் பெரிய அற்புதம் அவர்கள் மக்களைத் தள்ளும்போது அவர்கள் கீழே விழுவதாகும்]. இப்படிப் பயணம் செய்யும் ஊழியர்கள் போதர்களாகவோ அல்லது பிரசங்கிமார்களாகவோ அல்லது புத்திசொல்லுகிறவர்களாகவோ [பார்க்க, ரோமர் 12:8] இருக்கலாம். ஆனால் அவர்கள் சுவிசேஷகரின் பொறுப்பில் இருக்கவில்லை. என்றாலும், தேவன் ஒருவர் புத்திசொல்லு பவராகவோ அல்லது பிரசங்கியாராகவோ தனது ஊழியத்தைத் துவங்கும் படி செய்து பிற்காலத்தில் அவரைச் சுவிசேஷகராக உயர்த்தலாம்.

சுவிசேஷகரின் பொறுப்பைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள அப்போஸ்தலர் 8:4–40 வசனங்களை வாசியுங்கள். இங்கே பிலிப்புவின் ஊழியத்தைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது., ஒன்றையொன்று சார்ந்திருக்கும் ஊழிய வரங்களின் முக்கியத்துவத்தைக் கவனியுங்கள். [குறிப்பாக வசனங்கள் 14–25]. பிலிப்பு எப்படித் திரளான மக்களுக்குச் சுவிசேஷத்தை அறிவித்தது மட்டுமல்லாமல், தனிப்பட்டவர்களுக்கும் அதை அறிவிக்கும்படி வழிநடத்தப்படுகிறார் என்பதையும் கவனியுங்கள் [பார்க்க, அப். 8:25–39].

தங்களால் மனமாற்றம் பெற்றவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பொறுப்பு சுவிசேஷகர்களுக்குக் கொடுக்கப்பட்டுல்ளது. ஆனால் புதிய விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத் தைப் பெறும்படி உதவும் பொறுப்பு அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கவில்லை. அது அடிப்படையில் போதகர்/மூப்பர்/கண்காணி யின் பொறுப்பாகும்.





## மேய்ப்பரின் பொறுப்பு

முந்தைய இரு அத்தியாயங்களில் நான் ஒரு மேய்ப்பரின் வேதாகம ரீதியான பங்கை ஒரு சராசரியான நிறுவனப் போதகரின் பங்கோடு ஒப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். இப்போது இன்னுமதிகமாக ஒரு மேய்ப்பரின் ஊழியத்தைப் பற்றிப் பார்ப்போம்.

மேய்ப்பரின் பொறுப்பைக் குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால், மூன்று முக்கியமான கிரேக்கச் சொற்களைப் புரிந்துகொள்ள வேண்டும். கிரேக்க மொழியில் அவை 1] *பாய்மென்* 2] *பிரஸ்ப்யூட்டரோஸ்* 3] *எபிஸ்கோபோஸ்* என்று அழைக்கப்படுகின்றன. இவைகள் 1] *மேய்ப்பர்* அல்லது *போதகர்* 2] *மூப்பர்* 3] *கண்காணி* அல்லது *பேராயர்* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

*பாய்மென்* என்ற சொல் புதிய ஏற்பாட்டில் பதினெட்டு இடங்களில் காணப்படுகிறது. அது பதினேழு முறை *மேய்ப்பர்* என்றும் ஒருமுறை *போதகர்* என்றும் மொழிபெயர்க்கப்பட்டுல்ளது. இதன் வினைச் சொல்லாகிய *பாய்மெய்னோ* பதினொரு இடங்களில் காணப்படுகிறது. அது *மேய்ப்பர்* என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

*பிரஸ்ப்யூட்டரோஸ்* என்ற கிரேக்கச் சொல் புதிய ஏற்பாட்டில் அறுபத்தாறு முறைகள் வருகிறது. இவைகளில் அறுபது முறை அது *மூப்பர்* அல்லது *மூப்பர்கள்* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இறுதியாக, *எபிஸெகோபோஸ்* என்ற கிரேக்கச் சொல் புதிய ஏற்பாட்டில் ஐந்து முறைகள் காணப்படுகிறது. அது நான்கு இடங்களில் *கண்காணி* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று சொற்களும் சபையில் ஒரே பொறுப்பையே குறிக்கின்றன. இவைகள் மாற்றமுடியாதபடி பயன்படுத்தப்பட்டுள்ளன. பவுல் அப்போஸ்தலன் சபைகளை ஸ்தாபித்த போதெல்லாம் அவர் மூப்பர்களை [*பிரஸ்ப்யூட்டரோஸ்*] நியமித்தார். உள்ளூர் சபைகளைக் கவனிக்கும் பொறுப்பை அவர்களிடம் விட்டுச் சென்றார் [பார்க்க, அப். 14:23; தீத்து 1:5]. அவர்கள் தங்கள் மந்தைகளுக்குக் கண்காணி களாவவும் [*எபிஸ்கோபோஸ்*] மேய்ப்பர்களாகவும் [*பாய்மெய்னோ*] செயல்படுவது அவர்களுடைய பொறுப்பாகும். எடுத்துக்காட்டாக, அப்போஸ்தலர் 20:17 வசனத்தில் நாம் இப்படி வாசிக்கிறோம்:

> மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவுக்கு ஆள் அனுப்ப, சபையின் *மூப்பரை* [பிரஸ்ப்யூட்டரோஸ்] வரவழைத் தான் [அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இந்தச் சபை மூப்பர்களுக்குப் பவுல் சொல்லியது என்ன?

> ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட

> தமது சபையை *மேய்ப்பதற்குப்* (பாய்மேய்னோ) பரிசுத்தஆவி உங்களைக் *கண்காணிகளாக* (எபிஸ்கோபோஸ்) வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள் (அப். 20:28 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

மூன்று கிரேக்கச் சொற்களையும் மாற்றி மாற்றிப் பயன்படுத்தியிருப்பதைக் கவனியுங்கள். இவை மூன்று வெவ்வேறான பொறுப்புக்களைக் குறிக்கவில்லை. பவுல் அந்த *மூப்பர்களிடம்* அவர்கள் *கண்காணிகள்* என்றும் அவர்கள் மந்தையை *மேய்க்க* வேண்டும் என்றும் சொன்னார்.

பேதுரு தனது முதலாவது நிருபத்தில் இப்படி எழுதியிருக்கிறார்:

> உங்களிலுள்ள *மூப்பருக்கு* (பிரஸ்ப்யூட்டரோஸ்)உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்துள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் *மேய்த்து* (பாய்மெய்னோ), கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள் (1 பேதுரு 5:1–4 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது).

பேதுரு *மூப்பர்களிடம்* அவர்கள் மந்தையை *மேய்க்க* வேண்டும் என்று கூறினார். இங்கே *மேய்த்து* என்று வினைச் சொல்லில் கூறப்பட்டிருக்கும் அதே சொல் எபேசியர் 4:13 வசனத்தில் *மேய்ப்பர்* என்று பெயர்ச்சொல்லில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது:

> அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை *மேய்ப்பராகவும்* போதகராகவும் ஏற்படுத்தினார் (அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

மூப்பர்களும் மேய்ப்பர்களும் ஒருவரே என்று இதுவும் நமக்கு உறுதிப்படுத்துகிறது.

பவுல் தீத்து 1:5–7 வசனங்களில் *மூப்பர்* (பிரஸ்ப்யூட்டரோஸ்) என்ற சொல்லையும் *கண்காணி* (எபிஸ்கோபோஸ்) என்ற சொல்லையும் மாற்றிப் பயன்படுத்தக்கூடிய வகையில் பயன்படுத்தியிருக்கிறார்:





> நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் *மூப்பரை* ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தாதீவிலே விட்டுவந்தேனே... ***கண்காணி*யானவன்...** (அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

எனவே மேய்ப்பர், மூப்பர் மற்றும் கண்காணிகள் ஒரே பொறுப்பைக் கவனிக்கவில்லை என்று காரணத்தோடு விவாதிக்க முடியாது. எனவே புதிய ஏற்பாட்டு நிருபங்களில் கண்காணிகளுக்கும் மூப்பர்களுக்கும் எழுதப்பட்டிருக்கும் எதுவும் மேய்ப்பர்களுக்கும் பொருத்தமாக இருக்கிறது.

**சபை ஆளுகை**

மேலே மேற்கோளாகக் காட்டப்பட்ட வசனங்களிலிருந்து மூப்பர்/போதகர்/கண்காணிகளுக்குச் சபையின் ஆவிக்குரிய காரியங்களைக் கவனிக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருபபதோடுகூட, அவர்களுக்குச் சபை ஆளுகைப் பொறுப்பும் கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. மூப்பர்/போதகர்/கண்காணிகள் பொறுப்பில் இருக்கிறார்கள். சபையார் அவர்களுக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும்:

> உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே (எபி. 13:17).

எந்தவொரு கிறிஸ்தவரும் தேவனுக்குத் தன்னைக் கீழ்ப்படுத்தாத மேய்ப்பருக்குத் தன்னைக் கீழ்ப்படுத்தக் கூடாது என்பது உண்மையாகும். எந்தவொரு மேய்ப்பரும் பரிபூரணமானவர் அல்ல என்பதையும் அவர் உணர வேண்டும்.

ஒரு தகப்பன் தனது குடும்பத்தின்மீது அதிகாரம் பெற்றிருப்பது போல மூப்பர்/போதகர்/கண்காணி சபையின்மீது அதிகாரம் பெற்றிருக்கறார்கள்:

> ஆகையால் கண்காணியானவன் (மேய்ப்பர் /மூப்பர்) குற்றஞ்சாட்டப்படாதவனும்... தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பள்ளைகளைச் சகல நல்லொழுக்க முள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். *ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த*

*அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?* [1தீமோ. 3:2–5 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

பவுல் தொடர்ந்து இவ்வாறு சொல்லுகிறார்:

*நன்றாய் விசாரணைசெய்கிற* மூப்பர்களை [மேய்ப்பர் களை/ கண்காணிகளை], விசேஷமாகத் திருவசனத் திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ண வேண்டும் [1 தீமோ. 5:17 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

மூப்பர்கள் சபையை ஆளுகைசெய்ய வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

## வேதாகமரீதியல்லாத மூப்பர்கள்

தாங்கள் ஆளுகைசெய்வதற்காக மூப்பர்களின் குழுவைப் பெற்றிருப்பதால் தங்கள் ஆளுகை அமைப்பு வேதாகமரீதியானது என்று பல சபைகள் நம்புகின்றன. ஆனால் யார் மூப்பர்கள் என்ற அவர்களுடைய கருத்தில்தான் பிழை இருக்கிறது. அவர்களுடைய மூப்பர்கள் ஒழுங்காகச் சபையிலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டு, ஒரு காலகட்டத்துக்குப் பிறகு மாற்றப்படுகிறார்கள். அவர்களை ''மூப்பர் களின் குழு'' என்று அழைக்கிறார்கள். ஆனால் வேதாகம வரையறை யின்படி இப்படிப்பட்ட மக்கள் மூப்பர்கள் அல்ல. ஒருவர் மூப்பராக வேண்டுமானால் அவர் எந்தெந்த தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்று பவுல் சொல்லுகிறாரோ அவைகளைக் கொண்டு சீர்தூக்கிப் பார்ப்போமானால், இது தெளிவாகிறது. ஒரு மூப்பர் சபையில் ஊதியம் பெறும் முழுநேரப் பணியில் ஈடுபட்டிருக்கிறார் என்றும், அவர் போதிப்பதிலும், பிரசங்கிப்பதிலும், ஆளுகைசெய்வதிலும் ஈடுபட்டிருக் கிறார் என்றும் பவுல் சொல்லியிருக்கிறார் [பார்க்க, 1 தீமோ. 3:4–5; 5:17–18; தீத்து 1:9]. இப்போதைய சபைகளின் ''மூப்பர் குழுவில்'' இருப்பவர்கள் இத்தகைய தகுதியைப் பெற்றிருப்பதில்லை. அவர் களுக்கு ஊதியம்கொடுப்பதில்லை; அவர்கள் பிரசங்கிப்பதில்லை, போதிப்பதில்லை; அவர்கள் சபைக்காக முழுநேர ஊழியம் செய்வ தில்லை. ஒரு சபையை நிர்வாகம் செய்வது எப்படி என்பதை அவர்கள் அறிந்திருப்பதும் அபூர்வமாகும்.

வேதாகமரீதியல்லாத சபை ஆளுகையே வேறு எதையும்விட உள்ளூர் சபைகளில் அதிகமான பிரச்சினைகளை உண்டாக்குகிறது. தவறான மக்கள் ஒரு சபையை ஆளுகைசெய்யும்போது, அது பிணக்குக்கும், விசுவாசத்தை விட்டுக்கொடுத்தலுக்கும், ஒரு சபையின் அழிவுக்குமே வழிநடத்துகிறது. ஒரு வேதாகமரீதியல்லாத சபை ஆளுகை பிசாசுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து அழைக்கிறது.





நான் வீட்டுச் சபைப் போதகர்களுக்கு மட்டுமல்லாமல், அமைப்பு ரீதியான சபைப் போதகர்களுக்கும் இதை எழுதுகிறேன் என்பதை உணர்கிறேன். சில அமைப்புரீதியான சபைப் போதகர்கள் ஏற்கெனவே வேதாகமரீதியல்லாத ஆளுகையைக் கொண்டிருக்கும் சபைகளுக்குப் போதகர்களாக இருக்கலாம். அந்தச் சபையில் மூப்பர்கள் சபை யிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டிருக்கலாம். இப்படிப்பட்ட வேதாகம ரீதியல்லாத ஆளுகை அமைப்புக்களைப் பிணக்குகள் இல்லாமல் மாற்ற முடியாது.

இப்படிப்பட்ட போதகர்களுக்கு நான் ஒரு ஆலோசனை கொடுக் கிறேன். அவர்கள் தேவனுடைய உதவியோடுகூட சபையின் ஆளுகை அமைப்பை மாற்ற முயல வேண்டும். தாற்காலிகமாக வரும் பிணக்கு களைச் சகித்துக்கொள்ள வேண்டும். அவர் எதுவும் செய்யாதிருப்பார் என்றால் பிற்காலத்தில் பிணக்குகள் அதிகரிக்கவே செய்யும். அவர் தாற்காலிகப் பிணக்குளை வெற்றிகரமாகச் சமாளிப்பார் என்றால், பிற்காலத்திய பிணக்குகள் எல்லாவற்றையும் தவிர்க்க முடியும். அவர் தோற்றுப்போவார் என்றால் எப்போதுமே அவர் ஒரு புதிய சபையைத் துவங்கி, துவக்கத்திலிருந்தே அதில் சரியான ஆளுகையைக் காத்துக் கொள்ள முடியும்.

இது வேதனை தரும் காரியமாக இருந்தாலும், காலம் கடக்கும் போது அவரால் தேவனுடைய ராஜ்யத்துக்காக அதிகமான கனிகளைக் கொடுக்க முடியும். இப்போது அவருடைய சபையை ஆளுகை செய்கிறவர்கள் கிறிஸ்துவின் மெய்யான சீஷர்களாக இருப்பார் களானால், அவர் வேதாகமரீதியான மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று மரியாதையோடு அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அந்த மாற்றங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும்.

## மூப்பர்கள் என்பது பன்மையா?

சிலர் வேதாகமத்தில் மூப்பர்கள் என்ற சொல் எப்போதுமே பன்மை யில் வருகிறபடியால் ஒரு மந்தையை வழிநடத்த ஒரு மூப்பர்/போதகர்/ கண்காணியைப் பெற்றிருப்பது வேதாகமரீதியானது அல்ல என்று சொல்லுகிறார்கள். இதற்கு முடிவான நிரூபணம் இல்லை என்பதே என்னுடைய கருத்தாகும். சில பட்டணங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் சபையைக் கண்காணித்தார்கள் என்று வேதாகமம் சொல்லுவது உண்மைதான். ஆனால் இவர்கள் ஒரே சபையைச் சமமான அந்தஸ்தில் கவனித்தார்கள் என்று சொல்லப்படவில்லை. எடுதது்க் காட்டாக, பவுல் எபேசு சபை மூப்பர்களை ஒன்றாகக் கூட்டிச் சேர்த்த போது [பார்க்க, அப். 20:17] இந்த மூப்பர்கள் ஒரு பட்டணத்திலிருந்து வந்தார்கள். அந்தப் பட்டணத்தில் பல்லாயிரக்கணக்கான விசுவாசிகள் இருக்க வேண்டும் [பார்க்க, அப். 19:19]. எனவே எபேசு சபையில் பல

மந்தைகள் இருந்திருக்க வேண்டும். ஒவ்வொரு தனிப்பட்ட மூப்பரும் ஒரு தனிப்பட்ட வீட்டுச்சபையைக் கண்காணித்தார் என்பதே உண்மையாகும்.

தேவன் ஒரு பணியைச் செய்ய ஒரு குழுவை அழைத்தார் என்பதற்கு வேதாகமத்தில் எந்த ஆதாரமும் இல்லை. அவர் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவிக்கும்படி தீர்மானித்தபோது அவர் மோசே என்ற ஒரே மனிதனையே தலைவனாக அழைத்தார். மற்றவர்கள் மோசேக்கு உதவிசெய்யும்படி அழைக்கப்பட்டிருந்தார்கள், அவர்கள் மோசேக்குக் கீழ்ப்பட்டிருந்தார்கள். மோசேயைப் போலவே அவர்களும் மக்களின் ஒரு துணைக்குழுவுக்குப் பொறுப்பாக இருந்தார்கள். வேதாகமத்தில் மறுபடியும் மறுபடியுமாக நம்மால் இந்த ஒழுங்குமாதிரியைக் காண முடிகிறது. தேவனுக்கு ஒரு பணியைச் செய்து முடிக்க வேண்டியிருக்கும்போது, அவர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி ஒரு நபரை அழைக்கிறார், அந்த நபருக்கு உதவும்படி அவர் மற்றவர்களை அழைக்கிறார்.

எனவே தேவன் இருபது உறுப்பினர்களை மட்டுமே கொண்ட ஒவ்வொரு வீட்டுச் சபையையும் ஆளுகைசெய்ய சமமான அதிகாரத்தைக்கொண்ட ஒரு மூப்பர் குழுவை அழைத்திருக்க மாட்டார்.

இதற்காக ஒவ்வொரு வீட்டுச் சபையும் ஒரே நபரால் மட்டுமே கண்காணிக்கப்பட வேண்டும் என்ற அவசியமில்லை. அதாவது, ஒரு சபையில் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இருப்பார்களானால், முதிர்ச்சியிலும் வயதிலும் குறைந்த மூப்பர் அல்லது மூப்பர்கள் ஆவிக்குரியபிரகாரமாக அதிக முதிர்ச்சியடைந்த, வயதிலும் முதிர்ந்த ஒரு மூப்பருக்குத் தங்களைக் கீழ்ப்படுத்த வேண்டும்.

வேதாகமரீதியாக, வேதாகமப் பள்ளிகள் அல்ல, சபைகளே இளம் வயதிலான போதகர்/மூப்பர்/கண்காணிகளுக்குப் பயிற்சியளிக்கும் களமாக இருக்க வேண்டும். எனவே ஒருவீட்டுச் சபையில் பல போதகர்/மூப்பர்/கண்காணிகள் இருக்க முடியும்; அப்படி இருப்பது விரும்பத்தக்கதுதான். ஆவிக்குரியபிரகாரமாக இளையவர்கள் ஆவிக்குரியபிரகாரமாக முதியவர்களிடமிருந்து பயிற்சியைப் பெற வேண்டும்.

''சமமான'' அதிகாரம் கொண்ட மூப்பர்களால் ஆளுகை செய்யப்படும் சபைகளிலும்கூட இது நடப்பதை நான் கண்டிருக்கிறேன். எப்போதுமே மற்றவர்கள் குறிப்பிட்ட ஒருவரை நோக்கிப் பார்க்கிறார்கள். அல்லது ஒருவர் மேலாண்மை செய்கிறவராகவும், மற்றவர்கள் பணிந்து போகிறவர்களாகவும் இருக்கிறார்கள். அல்லது பிணக்கு ஏற்படும் வாய்ப்பே அதிகமாகிறது. குழுக்களில் ஒருவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப்படுகிறார் என்பதும் உண்மையகும். சமமான அதிகாரம் கொண்ட ஒரு குழுவினர் ஒரு பணியைச் செய்ய முற்படும்போது, ஒரு





தலைவரே இருக்க வேண்டும் என்பதை அவர்கள் உணர்கிறார்கள். சபையிலும் இப்படித்தான் இருக்கிறது.

மேலும் மூப்பர்களின் பொறுப்பைப் பவுல் 1 தீமோத்தேயு 3:4–5 வசனங்களில் தகப்பான்மார்களின் பொறுபோடு ஒப்பிடுகிறார். மூப்பர்கள் தங்கள் சொந்த வீட்டைச் சரியாக நிர்வாகிக்காவிட்டால், அவர்கள் சபையை நிர்வகிக்கும் பொறுப்புக்குத் தகுதியானவர்கள் ஆக மாட்டார்கள். ஆனால் இரண்டு சமமான தகப்பன்மார்கள் இருப்பார்களானால் ஒரு குடும்பத்தை எப்படிச் சரியாக நிர்வகிக்க முடியும்? பிரச்சினைகல் அதிகமாகும் என்றே நான் நினைக்கிறேன்.

மூப்பர்கள்/போதகர்கள்/கண்காணிகள் ஒரு பெரிய உள்ளூர் சரீரமாகிய சபையில் ஒருவரோடொருவர் இணைக்கப்பட வேண்டும். அப்போது சக மூப்பர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் கணக்குக் கொடுக்கிறவர்களாக இருக்க முடியும், பிரச்சினைகளில் ஒருவர் மற்றவருக்கு உதவிசெய்ய முடியும். ''மூப்பராகிய சங்கத்தார்'' என்று பவுல் குறிப்பிடுகிறார் [பார்க்க, 1 தீமோ. 4:14]. இது *பிரஸ்ப்யூட்டரோஸ்* [மூப்பர்கள்] சேர்ந்த சங்கமாக இருக்கலாம், ஊழிய வரங்களைப் பெற்ற மற்றவர்களும் இதில் கூடிவந்திருக்கலாம். சபையை ஸ்தாபித்த மூப்பர் இருப்பாரானால், ஒரு மூப்பர் செய்த பிழையினால் ஒரு உள்ளூர் சபையில் பிரச்சினைகள் உண்டாகுமானால் அவர் அதைக் கவனிக்க முடியும். அமைப்புரீதியான சபைப் போதகர்கள் வழிமாறிப் போகும்போது சபையின் வடிவமைப்பின் காரணமாக அது பெரிய பிரச்சினைகளைக் கொண்டுவருகிறது. ஒரு கட்டிடத்தையும், செயல்திட்டங்களையும் பராமரிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் ஒரு போதகர் வழிதவறிச் செல்லும்போது வீட்டுச் சபையை உடனடியாகக் கலைக்க முடியும். உறுப்பினர்கள் மற்றொரு சரீரமாகிய சபையில் சேர்ந்துகொள்ள முடியும்.

## சேவிப்பதற்கான அதிகாரம்

தேவன் ஒரு போதகருக்கு அவருடைய சபையின்மேல் ஆவிக்குரிய மற்றும் ஆளுகை அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறபடியால் அவர் தனது மந்தையை மேலாண்மை செய்ய அதிகாரம் பெற்றிருக்கிறார் என்று அர்த்தம் அல்ல. அவர் ஆண்டவர் அல்ல – இயேசுவே ஆண்டவராவார். சபையார் போதகருடைய மந்தை அல்ல, தேவனுடைய மந்தையாக இருக்கிறார்கள்.

> உங்களிடத்துள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், *சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்.* அப்படிச் செய்தால்

> பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள் [1 பேதுரு 5:2–4 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

ஒவ்வொரு போதகரும் ஒருநாள் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாகக் கணக்குக்கொடுக்க வேண்டியிருக்கும்.

மேலும், பொருளாராத காரியங்களில் ஒரு தனிப்பட்ட மூப்பர்/போதகர்/கண்காணி தனிமையில் செயல்படக் கூடாது. ஏதாவது ஒரு காரணத்துக்காகப் பணம் ஒழுங்காகச் சேகரிக்கப்படுமானால், நிதியைக் கையாளுவதில் ஏதேனும் அவநம்பிக்கை ஏற்பட்டுவிடாதபடி. சபையிலுள்ள மற்றவர்கள் கணக்கு வழக்குகளைக் கவனிக்க வேண்டும் [பார்க்க, 2 கொரி. 8:18–23]. இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட குழுவினராக இருக்கலாம்.

## மூப்பர்களுக்குச் சம்பளம் கொடுத்தல்

மூப்பர்/போதகர்/கண்காணிகளுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும் என்று நாம் வேதாகமத்திலிருந்து அறிகிறோம். ஏனென்றால் அவர்கள் சபையின் முழுநேர ஊழியர்களாக இருக்கிறார்கள். பவுல் இப்படி எழுதியிருக்கிறார்:

> நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ண வேண்டும். போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்றும், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும், வேதவாக்கியம் சொல்லுகிறதே [1 தீமோ. 5:17–18].

பவுல் *கூலி* என்ற சொல்லைப் பயன்படுத்துவதைக் கவனியுங்கள். பின்னணியைப் பார்க்கும்போது நன்றாக விசாரணை செய்கிற மூப்பர்களை இரட்டிப்பான கனத்துக்குப் பாத்திரராக ஏன் எண்ன வேண்டும் என்பதற்கான காரணத்தை நாம் புரிந்துகொள்ளுகிறோம். இதற்கு முந்தைய வசனங்கவில் பவுல் ஆதரவில்லாத விதவைகளுக்குச் சபையானது பொருளாதாரரீதியாக ஆதரவளிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அப்போதும் அவர் கனம்பண்ணுதல் என்றே குறிப்பிட்டுருக்கிறார்: ‘‘உத்தம விதவைகளாகிய விதவைகளைக் கனம்பண்ணு’’ [பார்க்க, 1 தீமோ. 5:3–16]. எனவே இந்தப் பின்னணியில் ‘‘கனம்பண்ணுவது’’ என்றால் பொருளாதாரரீதியாக உதவியளிப்பதாகும். நன்றாக ஆளுகை செய்யும் மூப்பர்களுக்கு இரட்டிப்பான கனத்தை, அதாவது விதவைகளுக்கு அளிக்கும் உதவியைவிட இரட்டிப்பான உதவியை அளிக்க வேண்டும். அவர்களுக்குப் பிள்ளைகள் இருக்குமானால் இன்னுமதிகமாகக் கொடுக்க வேண்டும்.





உலகெங்கிலுமுள்ள அமைப்புரீதியான சபை தனது போதகர்களுக்குப் பெரும்பாலும் ஆதரவளிக்கிறது [ஏழை நாடுகளிலும்கூட]. ஆனால் உலகெங்கிலும் வீட்டுச் சபைகள, குறிப்பாக அமெரிக்காவிலுள்ள சபைகள் அப்படி ஆதரவளிப்பதில்லை. இதற்குக் காரணம் மேற்கத்திய நாடுகளில் வீட்டுச் சபைகளில் சேருபவர்களின் செயல்நோக்கம் அவர்கள் மெய்யாகவே இருதயத்தில் கலகக்குணம் கொண்டிருப்பதே என்று நான் நம்புகிறேன். உலகத்திலேயே தங்களிடமிருந்து அதிகமாக எதிர்பார்க்காத ஒரு சபையை அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அமைப்புரீதியான சபையின் அடிமைத்தனத்திலிருந்து தப்புவதற்காகவே தாங்கள் வீட்டுச் சபையில் சேர்ந்திருப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் உண்மையில் கிறிஸ்துவுக்காக எந்த ஒப்படைப்பும் கொண்டிருப்பதிலிருந்து தப்பவே அவர்கள் விரும்புகிறார்கள். பணத்தைக் கடவுளாகக் கொண்டு, பூமியில் பொக்கிஷங்களைச் சேர்ப்பதின்மூலம் அதை நிரூபிப்பவர்கள் கிறிஸ்துவின் மெய்யான சீஷர்கள் அல்ல [பார்க்க, மத். 6:19–24; லூக்கா 14:33]. ஒருவருடைய கிறிஸ்தவ நம்பிக்கை அவர் பணத்தைக் குறித்து என்ன செய்கிறார் என்பதில் தாக்கம் விளைவிக்காவிட்டால், அவர் கிறிஸ்தவரே அல்ல!

வேதாகமரீதியானவை என்று சொல்லிக்கொள்ளும் வீட்டுச் சபைகள் தங்கள் போதகர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். எளியவர்களுக்கு ஆதவளித்து அருட்பணிகளுக்கு உதவ வேண்டும். கொடுப்பதிலும், எல்லா நிதி சம்பந்தமான காரியங்களிலும் அவர்கள் அமைப்புரீதியான சபைகளைவிட மிஞ்ச வேண்டும். ஏனென்றால் அவர்கள் கட்டிடங்களுக்காகச் செலவழிக்க வேண்டியதில்லை, செயல்திட்ட அலுவலர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கவில்லை. பத்துப் பேர் தசமபாகம் கொடுத்தாலே ஒரு போதகருக்கு ஆதரவளிக்க முடியும். தங்கள் வருமானத்தில் இருபது சதவீதத்தைக் கொடுக்கும் பத்துப் பேரால் தங்கள் போதகருக்கு அதரவு அளிப்பது மட்டுமின்றி, அவருக்குக் கொடுப்பது போலவே ஒரு அருட்பணியாளரையும் தாங்க முடியும்.

## மேய்ப்பர்கள் என்ன செய்கிறார்கள்?

சபைக்கு வரும் சராசரியான ஒருவரிடம் ‘‘கீழ்க்கண்ட காரியங்களைச் செய்வது யாருடைய வேலை?’’ என்று கேட்பதாகக் கற்பனை செய்து பார்ப்போம்.

இரட்சிக்கப்படாதவர்களோடு யார் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்? யார் பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டும்? யார் ஜெபிக்க வேண்டும்? யார் புத்திசொல்லி, ஊக்குவித்து, மற்ற விசுவாசிகளுக்கு உதவ வேண்டும்? யசார் நோயாளிகளைச் சென்று பார்க்க வேண்டும்? யார் நோயாளிகளின்மீது கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்க வேண்டும்? யார் மற்றவர்களின் பாரங்களைத் தான் தாங்க வேண்டும்? யார் சரீரத்துக்குக்காகத் தனது வரங்களைச் செயல்படுத்த வேண்டும்? யார்

தன்னைத்தான் வெறுத்து தேவனுடைய ராஜ்யத்துக்காகத் தியாகம் செய்ய வேண்டும்? யார் சீஷர்களை உருவாக்கி, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி அவர்களுக்குப் போதிக்க வேண்டும்?

சபைக்குச் செல்லும் பலரிடம் இந்தக் கேள்விகளைக் கேட்பீர்களானால் அவர்கள் எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் ''இவையெல்லாம் போதகரின் பொறுப்புக்கள்'' என்று சொல்லுவார்கள். ஆனால் அது உண்மைதானா?

வேதவசனங்களின்படி ஒவ்வொரு விசுவாசியும் இரட்சிக்கப்படாத மக்களோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்:

> கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக்கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் [1 பேதுரு 3:15].

ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டும்:

> உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே [1 பேதுரு 1:15–16].

ஒவ்வொரு விசுவாசியும் ஜெபிக்க வேண்டும்:

> எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் [1 தெச. 5:16, 17].

ஒவ்வொரு விசுவாசியும் மற்ற விசுவாசிகளுக்குப் புத்திசொல்லி, அவர்களை ஊக்குவித்து, அவர்களுக்கு உதவ வேண்டும்:

> மேலும், *சகோதரரே,* நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள் [1 தெச. 5:14 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

ஒவ்வொரு விசுவாசியும் நோயாளிகளைச் சென்று சந்திக்க வேண்டும்:

> வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை





> விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார் [மத். 25:36].

**கூடுதலான பொறுப்புகள்**

ஆனால் இதோடு முடிந்துவிடவில்லை. ஒவ்வொரு விசுவாசியும் நோயாளிகளின்மீது கையை வைத்து அவர்களைக் குணமாக்க வேண்டும்:

> விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; *வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்* என்றார் [மாற்கு 16:17–18 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

ஒவ்வொரு விசுவாசியும் சக விசுவாசிகளின் பாரத்தைத் தாங்க வேண்டும்:

> ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் [கலா. 6:2].

ஒவ்வொரு விசுவாசியும் மற்றவர்களுக்காகத் தனது வரங்களைச் செயல்படுத்த வேண்டும்:

> நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன் [ரோமர் 12:6–8].

ஒவ்வொரு விசுவாசியும் தன்னைத்தான் வெறுத்து, சுவிசேஷத்துக்காகத் தியாகம் செய்ய வேண்டும்:

> பின்பு அவர் ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் தம்மிடத்தில் அழைத்து: ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் *தன்னைத்தான் வெறுத்து,* தன்

சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான் [மாற்கு 8:34—35 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

ஒவ்வொரு விசுவாசியும் சீஷர்களை உருவாக்கி, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, அவர்களுக்குக் கிறிஸ்துவின் கட்டளை களைப் போதிக்க வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது:

ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு *போதிக்கிறவனோ*, பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான் [மத். 5:19 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

காலத்தைப் பார்த்தால், *போதகராயிருக்க* வேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதா யிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள் [எபி. 5:12 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், *சகல ஜாதிகளையும் சீஷராக்கி*, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே *அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்*. இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார் [மத். 28:19—20 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].[57]

இந்தப் பொறுப்புகள் எல்லாமே ஒவ்வொரு விசுவாசிக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் சபைக்குச் செல்லும் பெரும்பாலான

[57] இயேசுவின் சீஷர்கள் தங்கள் சீஷர்களுக்கு அவர் கற்பித்த எல்லாவற்றுக்கும் கீழ்ப்படிய வேண்டுமென்று போதித்திருப்பார்களானால், அவர்கள் தங்கள் சீஷர்களிடம் இயேசு கற்பித்தபடியே மற்றவர்களைச் சீஷராக்கி, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, கிறிஸ்துவின் கட்டளைகளைக் கற்றுக்கொள்ளும்படி போதித்திருப்பார்கள். இதனால் அடுத்தடுத்து வரும் ஒவ்வொரு சீஷருக்கும் இந்தப் பொறுப்பு உள்ளது.





வர்கள் இவையெல்லாம் போதகரின் பொறுப்புகள் என்று நினைக் கிறார்கள்! போதகர்கள் பெரும்பாலும் இந்தப் பணிகள் முற்றிலும் தங்களுக்குரியவை என்று நினைப்பதே இதற்குக் காரணமாக இருக்கலாம்.

## அப்படியானால் மேய்ப்பர்கள் என்ன செய்ய வேண்டும்?

இந்தப் பொறுப்புகள் எல்லாம் விசுவாசிகளுக்குக் கொடுக்கப் பட்டிருக்குமானால் மேய்ப்பர்கள் என்ன செய்ய வேண்டும்? *பரிசுத்த வான்கள் இவை எல்லாவற்றையும் செய்யும்படி அவர்களை ஆயத்தப் படுத்தும்படிக்கே அவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்* [பார்க்க, எபே.. 4:11—12]. *தங்கள் முன்மாதிரியின் மூலமாக* [பார்க்க, 1 தீமோ. 3:2; 4:12—13; 5:17; 2 தீமோ. 2:2; 3:16—4:4; 1 பேதுரு 5:1—4] *கிறிஸ்து வின் எல்லாக்கட்டளைகளுக்கும் கீழ்ப்படியும்படி பரிசுத்தவான்களுக்குப் போதிக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறார்கள்* [பார்க்க, மத். 28:19. 20].

வேதவசனங்கள் இதைவிடத் தெளிவாக இதை எடுத்துச் சொல்லியிருக்க முடியாது. ஒரு வேதாகமரீதியான மேய்ப்பரின் பங்கு ஞாயிற்றுகிழமை கூடுமான வரையில் அதிகமான மக்களைக் கூட்டிச் சேர்ப்பது கிடையாது. ''எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்துவதே'' அவர்களுடைய பொறுப்பாகும் [கொலோ. 1:28]. வேதாகமரீதியான மேய்ப்பர்கள் செவித்தினவுள்ளவர்களாக ஆக்குவதில்லை [பார்க்க, 2 தீமோ. 4:3]. அவர்கள் போதிக்கிறார்கள், பயிற்சியளிககிறார்கள், புத்திசொல்லுகிறார்கள், கடிந்துகொள்ளுகிறார் கள், சரிப்படுத்துகிறார்கள், எல்லாவற்றையும் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் செய்கிறார்கள் [பார்க்க, 2 தீமோ. 3:16—4:4].

பவுல் தீமோத்தேயுவுக்குத் தான் எழுதிய முதல் நிருபத்தில் மேய்ப்பரின் பொறுப்பில் இருக்கும் ஒருவருடைய தகுதிகளைக் குறிப்பிட்டிருக்கிறார். பதினைந்து தகுதிகளில் பதினான்கு அவருடைய நடத்தையைக் குறித்ததாகும். இது அவருடைய வாழ்க்கை முறையின் முன்மாதிரியே மிக முக்கியமான காரியம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது:

கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை. ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாத வனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்தபுத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிற வனும், போதகசமர்த்தனுமாய் இருக்க வேண்டும். அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பண

> ஆசையில்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக் கூடாது. அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றிருக்க வேண்டும் (1 தீமோ. 3:1–7).

இந்தத் தகுதிகளைப் புதிய போதகரைத் தேடும் அமைப்புரீதியான சபைகள் வரையறை செய்யும் தகுதிகளோடு ஒப்பிடுவோமானால், அது அதிகமான சபைகளின் அடிப்படைப் பிரச்சினை என்ன என்பதை வெளிப்படுத்துகிறது. அவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம் ஒரு நிர்வாகி, கேளிக்கைக்காரர், குறுகிய சொற்பொழிவைக் கொடுப்பவர், மேலாண்மை செய்கிறவர், மனோவியல் நிபணர், செயல்திட்ட இயக்குநர், நிதி திரட்டுபவர், எல்லோருக்கும் நண்பர், அதிகமாக வேலை செய்பவர் போன்ற எல்லாத் தகுதிகளையும் கொண்ட ஒருவரைத்தான். யாராவது ''சபையின் ஊழியத்தை நடத்த வேண்டுமென்று'' அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் வேதாகமரீதியான கண்காணியோ எல்லாவற்றுக்கும் மேலாக, நற்பண்புகளைக் கொண்டவராகவும், கிறிஸ்துவுக்கு ஒப்படைப்புக் கொண்டவராகவும், மெய்யான சேவகனாகவும் இருக்க வேண்டும். ஏனென்றால் தன்னைப்போல உள்ளவர்களைப் பெருக்கமடையச் செய்வதே அவருடைய இலக்காகும். ''நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்களும் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்'' என்று அவரால் சொல்ல முடிய வேண்டும் (1 கொரி. 11:1).

இந்தப் பொறுப்பைக் குறித்து மேலும் அறிய இந்த வசனங்களை வாசியுங்கள்: அப்போஸ்தலர் 20:28–31; 1 தீமோ. 5:17–20; தீத்து 1:5–9.

### உதவிக்காரரின் பொறுப்பு

முடிக்கும் வேளையில், உதவிக்காரர் அல்லது டீக்கன்மார்களைக் குறித்து ஒருசில காரியங்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். உதவிக்காரரின் பொறுப்பே உள்ளூர் சபையிலுள்ள மற்றொரு பொறுப்பாகும். ஐந்து ஊழிய வரங்களில் இது குறிப்பிடப்படவில்லை. மூப்பர்களைப் போல உதவிக்காரர்கள் சபையில் ஆளுகைசெய்யும் அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. *டீக்கன்* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொல் *டயகோனாஸ்* என்பதாகும். ''சேவகன்'' என்பதே





இதற்கு அர்த்தமாகும்.

எருசலேம் சபையில் விதவைகளின் பந்திவிசாரிப்பைச் சரிவரக் கவனிக்கும்படி நியமிக்கப்பட்ட ஏழு பேர்களே முதல் உதவிக்காரர்களாக இருக்கிறார்கள் (பார்க்க, அப். 6:1–6). அவர்கள் சபையினால் தெரிந்தெடுக்கப்பட்டு, அப்போஸ்தலர்களால் பொறுப்பில் அமர்த்தப்பட்டார்கள். அவர்களில் குறைந்தபட்சம் இருவரை – ஸ்தேவான், பிலிப்பு – வல்லமையான சுவிசேஷகர்களாக ஊழியம்செய்யும்படி தேவன் பின்னால் உயர்த்தினார்.

உதவிக்காரர்களைக் குறித்து 1 தீமோத்தேயு 3:8–13 வசனங்களிலும், பிலிப்பியர் 1:1 வசனத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு ஆணோ அல்லது பெண்ணோ இந்தப் பொறுப்பில் இருக்கலாம் (பார்க்க, 1 தீமோ. 3:11).